
விடுமுறைக்கால செயலட்டை

கணிதம்

தரம் - 05

மீட்டல்



www.moe.edu.lk

ஆக்கம் - R.நிரோஜ்

பாடம் - தரவுகளைக் கையாளுதல் 1

- **ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் 5 நாட்களில் உற்பத்தி செய்யப்பட்ட ஆடைகளின் விபரம்.**

நாட்கள்	எண்ணிக்கை
திங்கள்	25
செவ்வாய்	50
புதன்	75
வியாழன்	……..
வெள்ளி	125

1. அட்டவணையிலுள்ள எண்ணிக்கையின் கோலத்திற்கேற்ப இடைவெளி நிரப்புக.

2. செவ்வாய்க்கிழமையை விட வெள்ளிக்கிழமை எவ்வளவு ஆடைகள் கூடுதலாக உற்பத்தி செய்யப்பட்டன?
   ……

3. புதன், வெள்ளி ஆகிய இரு தினங்களிலும் உற்பத்தி செய்யப்பட்ட ஆடைகளின் மொத்த எண்ணிக்கை யாது?
   ……

4. 5 நாட்களிலும் உற்பத்தி செய்யப்பட்ட ஆடைகளின் மொத்த எண்ணிக்கை யாது?
   ……

5. மேலுள்ள அட்டவணையைக் கொண்டு நிரல் வரைபொன்றினை வரைக.

www.ikedu.lk

- தரப்படும் அட்டவணைகளை அவதானித்து நிரல் வரைபுகளை வரைக.
- நிரல் வரைபினை அவதானித்து 3 வாக்கியங்கள் எழுதுக.

- காய்கறி விற்பனை நிலையமொன்றில் விற்பனை செய்யப்பட்ட காய்கறிகளின் விபரம்.

காய்கறி வகை	அளவு kg
கோவா	50
பூசனி	65
கரட்	55
லீக்ஸ்	60
கத்தரிக்காய்	45

- தரம் 5A, 5B, 5C வகுப்பறையில் மாணவர்கள் விரும்பும் செல்லப்பிராணிகளின் விபரம்.

செல்லப்பிராணி	விரும்பும் மாணவர் தொகை
நாய்	18
பூனை	17
அணில்	15
கிளி	12
மைனா	14

- தாயக்கட்டை உருட்டி பெறப்பட்ட தகவல்களின் விபரம்

எழுத்து	எண்ணிக்கை
A	12
B	7
C	9
D	10
E	15
F	10

www.lkedu.lk

பாடம் - தசமம்

01.

- 10 கட்டங்கள் கொண்ட காகிதக் கீலங்கள் ஐந்தை வெட்டி எடுக்க.
- விரும்பிய கட்டங்களுக்கு நிறந்தீட்டுக.
- நிறந்தீட்டப்பட்ட பகுதியை தசம எண்ணாகவும் பின்னமாகவும் எழுதுக.

உதாரணம் -



$$0.2 = \frac{2}{10}$$

02. இணைப்போம்

0.9	$\frac{1}{10}$
0.4	$\frac{7}{10}$
0.7	$\frac{6}{10}$
0.1	$\frac{9}{10}$
0.6	$\frac{4}{10}$

03. தசம எண்ணை வாசிக்கும் முறையை எழுதுக.

0.1 - பூச்சியம் தசம் ஒன்று
0.7 - .....
0.5 - .....
0.3 - .....
0.6 - .....

04. மிகச் சிறிய எண்ணைத் தெரிவு செய்து வெற்றிடத்தில் எழுதுக.

$\frac{8}{10}$, $\frac{1}{4}$, 0.5 , 0.7 = ...

www.lkedu.lk

05. தரப்பட்ட உருவில் $\frac{4}{10}$ ஐ நிழற்றுக. எஞ்சிய பகுதியை பின்னமாக எழுதுக.



06. பின்வருவனவற்றை தசம எண்ணாக எழுதுக.

$7\frac{8}{10}$ = 7.8

$3\frac{4}{10}$ = ...


$2\frac{7}{10}$ = ...

$\frac{25}{100}$ = ...


$\frac{30}{100}$ = ...

$\frac{45}{100}$ = ...

07. பின்வரும் உருக்களில் நிறம் தீட்டப்பட்ட பகுதியை தசம எண்ணாக தருக.



.....



.....

www.lkedu.lk

பாடம் - நீளமும் தூரமும் 2

10mm = 1cm
100cm = 1m
1000m = 1km

- சென்ரிமீற்றரில் எழுதுக

1. 3 m = ……
2. 5 m = ……
3. 15 m = ……
4. 17 m = ……
5. 25 m = ……
6. 87m = ……

- மீற்றரில் எழுதுக

1. 300 cm = ……
2. 1500 cm = ……
3. 5000 cm = ……
4. 12000 cm = ……
5. 4600 cm = ……
6. 7500 cm = ……

- மீற்றர், சென்ரிமீற்றர் ஆகியவற்றில் எழுதுவோம்.

1. 450 cm = ……
2. 1350 cm = ……
3. 775 cm = ……
4. 4435 cm = ……
5. 9940 cm = ……
6. 12550 cm = ……

www.lkedu.lk

- **உமது வீட்டிலுள்ள சில பொருட்களின் நீளங்களை அளந்து அவற்றை சென்ரிமீற்றரிலும், மீற்றரிலும் எழுதுக.**

பொருள்	மீற்றர், சென்ரிமீற்றர்	சென்ரிமீற்றர்
(உதாரணம்) கட்டிலின் நீளம்	2 m 10 cm	210 cm
.....	.....	.....
.....	.....	.....
.....	.....	.....
.....	.....	.....

- **பின்வரும் வினாக்களுக்கு சுருக்கமான விடை தருக.**

1. 5km 60m ஐ m இல் தருக? .....

2. ஒரு கொடியைக் கட்டுவதற்கு 8m நீளமுள்ள கயிறு தேவைப்படுகின்றது. இப்போது 5m 30cm நீளமுள்ள ஒரு கயிறுத்துண்டு உள்ளது. இன்னும் எவ்வளவு நீளமுள்ள கயிறுத்துண்டு தேவை?
   .....

3. மீற்றரில் எழுதுக. 1000cm : .....
   கிலோ மீற்றரிலும் மீற்றரிலும் எழுதுக. 2060m : .....

4. 8 மீற்றர் நீளமான கயிற்றில் 2 மீற்றர் 10 சென்ரிமீற்றர் நீளமான துண்டை வெட்டி நீக்கினால் மீதியுள்ள கயிற்றின் நீளம் யாது?
   .....

5. 4m நீளமான இரும்புக்கம்பி ஒன்றிலிருந்து 2m 42cm அளவுடைய ஒரு துண்டு வெட்டி எடுக்கப்பட்டது. எஞ்சியுள்ள கம்பியின் நீளம் m cm இல் எவ்வளவு? .....

6. 100 cm நீளமுள்ள ஓர் அளவை நாடாவின் நடுவில் 15 cm நீளமுள்ள பகுதி சேதமடைந்துள்ளது. அப்பகுதியை அகற்றி மீதி இரு துண்டுகளும் 5 cm வீதம் ஒன்றின் மீது ஒன்று வைத்து ஒட்டப்பட்டன. தற்போது அளவை நாடாவின் நீளம் யாது?
   .....

www.lkedu.lk

பாடம் - பணம் 2

- **பின்வரும் பொருட்களை வாங்குவதற்கு செலுத்த வேண்டிய தாள் காசுகளின் சேர்வையை எழுதுக. (ஒரு முறை போதுமானது)**

ரூபா 70.00 பெறுமதியான வர்ணப்பெட்டி
……

ரூபா 160.00 பெறுமதியான சித்திரப் புத்தகம்
……

ரூபா 1250.00 பெறுமதியான காற்சட்டை
……

ரூபா 330.00 பெறுமதியான குடை
……

ரூபா 6580.00 பெறுமதியான கதிரை
……..

- **பின்வரும் பொருட்களை வாங்குவதற்கு செலுத்த வேண்டிய பணப்பெறுமதிகளின் சேர்வையை எழுதுக.**

ரூபா 15.00 பெறுமதியான பேனை
……..

ரூபா 37.50 பெறுமதியான இனிப்புப் பைக்கற்று
……...


ரூபா 72.00 பெறுமதியான குளிர்பான போத்தல்
……..

ரூபா 22.50 பெறுமதியான நிறப் பேனை
……..

www.ikedu.lk

- **கீழுள்ள பொருட்களின் விலைகளை அவதானித்து வினாக்களுக்கு விடை தருக.**

புத்தகம்



ரூபா 450.00

சட்டை



ரூபா 1750.00

கதிரை



ரூபா 7990.00

கைக்கடிகாரம்



ரூபா 4350.00

கண்ணாடி



ரூபா 2499.00

பாதணி



ரூபா 3450.00

1. **பின்வரும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் செலுத்த வேண்டிய மொத்த பணத்தைக் காண்க.**

- ஒரு பாதணியையும், இரண்டு புத்தகங்களையும் வாங்குதல்
  .....
- இரண்டு சட்டைகளையும், ஒரு கைக்கடிகாரத்தையும் வாங்குதல்
  .....
- ஒரு கண்ணாடியையும், ஒரு கைக்கடிகாரத்தையும் வாங்குதல்
  .....

- **பிரசினங்களைத் தீர்க்க.**

1. ரூபா 40.00 படி 6 மாம்பழங்களும், ரூபா 55.00 படி 2 அப்பிள்களும், ரூபா 90.00 படி இரண்டு அன்னாசிப்பழங்களும் வாங்குவதற்கு எவ்வளவு பணம் தேவை?
   .....
2. 1 லீற்றர் தேங்காய் எண்ணெயின் விலை ரூபா 110.00 ஆகும். 3 லீற்றர் தேங்காய் எண்ணெயின் விலை யாது?
   .....
3. ஒரு வீட்டின் ஒரு நாளைக்கான உணவுச் செலவு ரூபா 1250.00 ஆகும். அவ்வீட்டின் ஒரு வாரத்திற்கான உணவுச் செலவு யாது?
   .....

www.ikedu.lk

பாடம் - பெருக்கல் 2

- ஆறாம், ஏழாம் பெருக்கல் வாய்ப்பாட்டினை மனனம் செய்வோம்.
- பின்வரும் கட்டங்களிலுள்ள இடைவெளிகளை நிரப்புவோம்.

1	×	6	.....
8	×	6	.....
.....	×	.....	78
10	×	.....	60
....	×	6	90

1	×	7	.....
.....	×	7	63
8	×	.....	56
12	×	7	.....
4	×	7	.....

- பெருக்குவோம்.

01

		1	8
		×	6

02

		3	5
		×	6

03

		7	4
		×	6

04

	1	8	0
		×	6

05

	6	6	6
		×	6

06

	5	0	0
		×	6

07

1	5	0	6
		×	6

08

		4	5
		×	7

09

		8	9
		×	7

10

	4	6	5
		×	7

11

	9	0	8
		×	7

12

	1	0	7
		×	7

www.lkedu.lk

- **பின்வரும் பிரசினங்களைத் தீர்க்க.**

01. ஒரு கரப்பந்தாட்ட அணியில் 6 வீரர்கள் பங்குபற்ற முடியும் எனின் 22 கரப்பந்தாட்ட அணியில் எத்தனை வீரர்கள் பங்குபற்ற முடியும்?

.....

02. ஒரு உடற்பயிற்சி செயற்பாட்டில் ஒரு வரிசையில் 6 மாணவர்கள் வீதம் 18 வரிசைகளில் உள்ள மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது?

.....

03. ஒரு மாணவனுக்கு 6 பென்சில்கள் வீதம் 40 மாணவர்கள் உள்ள வகுப்பிற்கு கொடுக்க தேவையான பென்சில்களின் எண்ணிக்கை யாது?

.....

04. ஒரு பக்கற்றில் 6 இனிப்புகள் வீதம் 560 பக்கற்றுகளில் உள்ள இனிப்புகளின் மொத்த எண்ணிக்கை யாது?

.....

05. 52 வாரங்களில் உள்ள நாட்களின் எண்ணிக்கை யாது?

.....

06. ஒரு பூவில் 7 இதழ்கள் வீதம் 800 பூக்களில் காணப்படும் இதழ்களின் மொத்த எண்ணிக்கை யாது?

.....

07. ஒரு நிரையில் 7 கதிரைகள் வீதம் 205 நிரலில் உள்ள கதிரைகளின் மொத்த எண்ணிக்கை யாது?

.....

08. ஒரு குழவில் 7 வீரர்கள் வீதம் 256 குழுக்களில் உள்ள வீரர்களின் மொத்த எண்ணிக்கை யாது?

.....

09. ஒரு பெட்டியில் 7 பந்துகள் வீதம் 450 பெட்டிகளில் உள்ள பந்துகளின் மொத்த எண்ணிக்கை யாது?

.....

10. ஒரு பாடசாலைக்குக் கொடுக்க 7 கணினிகள் வீதம் 777 பாடசாலைகளுக்குக் கொடுக்கத் தேவையான கணினிகளின் மொத்த எண்ணிக்கை யாது?

.....

www.lkedu.lk

பாடம் - நேரம் 02

60 நிமிடம் = 1 மணித்தியாலம்

- **நேரம் தொடர்பான பின்வரும் பிரசினங்களைத் தீர்க்க.**

01. ஒரு வயலில் மு.ப 7.45 இற்கு தொடங்கிய நெல் அறுவடை பி.ப 3.30 இற்கு முடிவடைந்தது.
    1. நெல் அறுவடைக்காக செலவிடப்பட்ட நேரத்தைக் காண்க?
    .....
    2. நெல் அறுவடை முடிவடைந்த நேரத்தை இருபத்து நான்கு மணித்தியாலத்தில் தருக? .....

02. கடிகாரம் ஒன்றின் மணித்தியால முள் ஓர் எண்ணிலிருந்து அடுத்த எண்ணிற்குச் செல்வதற்கு எடுக்கும் நேரத்திற்கும் நிமிட முள் ஓர் எண்ணிலிருந்து அடுத்த எண்ணிற்குச் செல்வதற்கு எடுக்கும் நேரத்திற்கும் இடையே உள்ள வித்தியாசம் எவ்வளவு நிமிடங்களாகும்?
    .....

03. கடிகாரம் ஒன்றின் நிமிடமுள்ளானது 12ம் எண்ணிலிருந்து 4ம் எண்ணிற்குச் செல்வதற்கு எடுக்கும் காலம் எத்தனை நிமிடம் ஆகும்?
    .....

04. பாடசாலை ஒன்றில் 14:15 மணிக்கு ஆரம்பமான விளையாட்டு விழா 17:30 மணிக்கு முடிவடைந்தது. விளையாட்டு விழா எவ்வளவு நேரம் நடைபெற்றது?
    .....

05. இப்பொழுது நேரம் பி.ப. 3.30 ஆகும். இன்னும் மூன்று மணித்தியாலங்களுக்குப் பின்னர் என்ன நேரம் என்பதை இருபத்து நான்கு மணித்தியாலக் கடிகாரத்தில் காட்டும் விதத்தில் இலக்கங்களில் எழுதுக?
    .....

06. பாடசாலை ஒன்றில் கலை நிகழ்ச்சிகள் 11:45 மணிக்கு ஆரம்பமாகி 14:30 மணிக்கு முடிவடைந்தன ஆயின் கலை நிகழ்ச்சிகள் எவ்வளவு நேரம் நடைபெற்றன?
    .....

www.ikeju.lk

07. பிற்பகல் 3.30 மணிக்குப் புத்தகம் ஒன்றை வாசிக்க ஆரம்பித்த அக்ஷலாவுக்கு அதனை வாசித்து முடிப்பதற்கு 1 மணித்தியாலம் 35 நிமிடங்கள் எடுத்தது. அக்ஷலா புத்தகத்தை வாசித்து முடித்த நேரத்தை இருபத்து நான்கு மணித்தியால நேரத்தில் தருக.

.....

08. பிற்பகல் 2.45 இற்கு வீட்டிலிருந்து புறப்பட்ட கீதா 45 நிமிடத்தில் நூல் நிலையத்திற்குச் சென்றாள். அவள் அங்கு 40 நிமிடங்கள் இருந்தாள்.

    1. கீதா நூல் நிலையத்திலிருந்து எத்தனை மணிக்குப் புறப்பட்டாள்?
       .....
    2. அந்நேரத்தை 24 மணித்தியாலக் கடிகாரத்திற்கேற்ப எழுதுக.
       .....

09. காலை 6.50 இற்குப் பாடசாலைக்கு வந்த முரளி பிற்பகல் 2.15 வரைக்கும் பாடசாலையில் தங்கியிருந்து வீட்டிற்குப் புறப்பட்டுச் சென்றான்.

    1. முரளி பாடசாலையிலிருந்து புறப்பட்ட நேரத்தை 24 மணித்தியாலக் கடிகாரத்திற்கேற்ப எழுதுக.
       .....
    2. முரளி பாடசாலையில் எவ்வளவு நேரம் தங்கியிருந்தான்?
       .....

10. ஒரு நூலகத்திற்கு வந்து அங்கு 4 மணித்தியாலம் 30 நிமிடத்தைச் செலவிட்ட சங்கர் அங்கிருந்து பி.ப 3.00 இற்குப் புறப்பட்டான்.

    1. சங்கர் புறப்பட்டுச் சென்ற நேரத்தை 24 மணித்தியாலக் கடிகாரத்திற்கேற்ப எழுதுக.
       .....
    2. சங்கர் நூலகத்திற்கு வந்த நேரம் யாது?
       .....

11. புகையிரத நிலையத்திற்கு 14:20 மணித்தியாலத்திற்கு வரவேண்டிய புகையிரதம் 45 நிமிடங்கள் தாமதமாக வருவதாக அறிவிக்கப்பட்டது. இதற்கேற்ப புகையிரதம் வரும் நேரம் யாது?

.....

www.ikedu.lk

பாடம் - வகுத்தல் 02

- **நெடும் வகுத்தல் முறை மூலம் பின்வரும் பிரசினங்களுக்கான விடைகளைக் காண்போம்.**

01) 360 ÷ 6 = ……

02) 450 ÷ 6 = ……

03) 1206 ÷ 6 = ……

04) 444 ÷ 6 = ……

05) 1544 ÷ 6 = ……

06) 700 ÷ 6 = ……

07) 49 ÷ 7 = ……

08) 599 ÷ 7 = ……

09) 787 ÷ 7 = ……..

10) 560 ÷ 7 = ……

11) 907 ÷ 7 = ……..

12) 7077 ÷ 7 = ……

- **பின்வரும் பிரித்தல் தொடர்பான பிரசினங்களைத் தீர்ப்போம்.**

01. 1045 இனிப்புகளை ஒரு மாணவனுக்கு 7 வீதம் வழங்கினால் எத்தனை மாணவர்களுக்கு வழங்க முடியும்?
……

02. 140 கதிரைகளை ஒரு வரிசையில் 7 கதிரைகள் வீதம் அடுக்கினால் எத்தனை வரிசைகளைப் பெறலாம்?
……


03. 84 மாணவர்களை ஒரு குழுவில் 7 மாணவர்கள் வீதம் ஒதுக்கினால் எத்தனை குழுக்களை அமைக்கலாம்?
……

04. 350 கொப்பிகளை ஒரு பெட்டியில் 7 கொப்பிகள் வீதம் வைத்து அடுக்குவதற்கு எத்தனைப் பெட்டிகள் தேவை?
……

www.lkedu.lk

- **நுண்ணறிவு வினாக்கள்**

- **பின்வரும் வினாக்களுக்கு கீழுள்ள படத்தை அவதானித்து விடை தருக.**



இச்சதுரமுகியானது எல்லாப் பக்கங்களிலும் நிறப்பூச்சு பூசப்பட்ட திண்ம உருவாகும். இதனைக் கருத்தில் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

01. இவ்வுருவில் உள்ள சிறிய சதுரமுகிகளின் எண்ணிக்கை யாது?
1.9 2.27 3.18

02. ஒரு பக்கம் மட்டும் நிறம் தீட்டப்பட்ட சதுரமுகிகளின் எண்ணிக்கை யாது?
1.6 2.54 3.27

03. இரண்டு பக்கங்கள் மட்டும் நிறம் தீட்டப்பட்ட சதுரமுகிகளின் எண்ணிக்கை யாது?
1.13 2.03 3.12

04. மூன்று பக்கங்கள் மட்டும் நிறம் தீட்டப்பட்ட சதுரமுகிகள் எத்தனை?
1.08 2.09 3.27

05. ஒரு பக்கம் கூட நிறம் தீட்டப்படாத சதுரமுகிகள் எத்தனை?
1.01 2.27 3.09

06. சதுர வடிவக் காணி ஒன்றைச் சுற்றி 20 தூண்கள் உள்ளன. எனின், ஒரு பக்கத்திலிருந்து பார்க்கும் போது எத்தனை தூண்கள் இருக்கும்?
1.5 2.6 3.4

07. ஒரு சதுர வடிவக் காணி ஒன்றைச் சுற்றி பாதுகாப்புத் தூண்கள் நடப்பட்டுள்ளன. அதன் ஒரு பக்கத்திலிருந்து பார்க்கும் போது 5 தூண்கள் தெரிகின்றன. எனின், காணியைச் சுற்றி உள்ள மொத்தத் தூண்களின் எண்ணிக்கை யாது?
1.20 2.24 3.16

www.ikedu.lk

பாடம் - மீட்டல் 02

- **பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

1. 3, 6, 0, 7 தரப்பட்ட நான்கு இலக்கங்களையும் பயன்படுத்தி அமைக்கத்தக்க மிகச் சிறிய எண்ணை எழுதுக.

   .....

2. உரோமன் எண்குறிகளுக்குச் சமமான இந்து அராபிய எண்குறிகளை எழுதுக.

   xiv..... ix.....

3. வெற்று அடைப்புகளை நிரப்புக.

   5 □ □
   □ 8 6
   1 8 2

4. 36 402 என்னும் எண்ணில்
   ஆயிரத்தினிடத்தில் அமைந்துள்ள இலக்கம் எது? .....
   அவ்விலக்கத்தினால் காட்டப்படும் பெறுமானம் யாது? .....

5. 29 999 இலும் 2 கூடிய எண்ணை எழுத்தில் எழுதுக.

   .....

6. எண்கோலத்தில் உள்ள இடைவெளிகளை நிரப்புக.
   86, 93, ..., 107, 114

7. 84 புத்தகங்களில் இருந்து 4 இல் 3 ஐ விற்ற பின்னர் எஞ்சியிருக்கும் புத்தகங்களின் எண்ணிக்கை யாது? .....

8. "ஆறாயிரத்து ஐம்பது" எனும் எண்ணை இலக்கத்தில் எழுதுக.

   .....


9. ஒரு தாங்கியிலுள்ள பாலிலிருந்து 12l 750ml அளவு பால் விற்கப்பட்டதன் பின்னர் எஞ்சியிருந்த பாலின் கனவளவு 4l 900ml ஆகும். தாங்கியில் முதலில் இருந்த பாலின் அளவை l,ml இல் தருக.

   .....

www.lkedu.lk

10. ரேவதி ஒரு சட்டையை வாங்குவதற்காகக் கடைக்குச் சென்றாள். சட்டையை வாங்குவதற்கு அவளுக்கு மேலும் 375 ரூபா தேவைப்பட்டது. சட்டையின் விலை 1300 ரூபா எனின் அவள் கடைக்குச் செல்லும் போது எடுத்துச் சென்ற பணம் எவ்வளவு? .....

11.உருவில் 0.4 ஐ நிழற்றுக.



12. எண்கோலத்தின் இடைவெளிகளை நிரப்புக.

9, 17, 25, 33, ... 1, 3, 9, ..., 81

13. 63 ரூபா 50 சதம் விலையுள்ள வரைதற் புத்தகம் ஒன்றையும் 72 ரூபா 75 சதம் விலையுள்ள நிறப் பென்சில் பெட்டி ஒன்றையும் வாங்குவதற்கு டிலக்ஷியிடம் 125 ரூபா மாத்திரம் இருந்தது. டிலக்ஷிக்கு இன்னும் எவ்வளவு பணம் தேவை? .....

14. ஒரு பெட்டியிலுள்ள பேனைகளின் எண்ணிக்கை 5 ஆகும். அத்தகைய 20 பெட்டிகளில் உள்ள பேனைகள் 4 வகுப்புகளிடையே சமமாக பகிர்ந்தளிக்கப்பட்டன. ஒரு வகுப்பிற்கு கிடைத்த பேனைகள் எத்தனை? .....

15. 32l நீரைக் கொள்ளக்கூடிய ஒரு கொள்கலனில் 17l 800ml நீர் உள்ளது. கொள்கலனை முற்றாக நிரப்புவதற்கு மேலும் எவ்வளவு நீரை ஊற்ற வேண்டும்? .....

16. ஒரு வகுப்பில் 40 பேர் வீதம் உள்ள மூன்று வகுப்புகள் உள்ளன. அவ்வகுப்புகளில் உள்ள ஒவ்வொரு மாணவனுக்கும் 3 அப்பியாசக் கொப்பிகள் வீதம் பகிர்ந்தளிப்பதற்குத் தேவையான அப்பியாசக் கொப்பிகள் எத்தனை? .....

www.ikeou.lk

- **பாடம் - திசைகள்**
- **திசைகளை அறிவோம்.**

சூரியன் உதிக்கும் திசை எது? .....

கிழக்கு

- **பிரதான திசைகள் நான்கு ஆகும்.**
  வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு
- **உப திசைகள் நான்கு ஆகும்.**
  வடகிழக்கு, தென்கிழக்கு, தென்மேற்கு, வடமேற்கு

வடமேற்கு	வடக்கு	வடகிழக்கு
மேற்கு		கிழக்கு
தென்மேற்கு	தெற்கு	தென்கிழக்கு


- **கீழுள்ள படத்தினை அவதானித்து வினாக்களுக்கு விடை தருக.**



01. மரத்திற்கு வடக்கில் காணப்படுவது எது?
.....
02. மோட்டார் சைக்கிள் மரத்திற்கு எத்திசையில் உள்ளது?
.....
03. பறவை காணப்படுவது மோட்டார் சைக்கிளுக்கு எத்திசையில்?
.....
04. மோட்டார் சைக்கிளுக்கு வடக்கில் உள்ளது எது?
.....
05. பேருந்திற்கு வடமேற்கில் இருப்பது எது?
.....

www.keau.lk

- **கீழுள்ள படத்தினை நன்கு அவதானித்து தரப்பட்டுள்ள வாக்கியங்களின் இடைவெளிகளை நிரப்புக.**



01. படலை கிணற்றுக்கு ..... உள்ளது.

02. கிணறு வீட்டிற்கு ..... உள்ளது.

03. வீட்டிற்கு வடமேற்கே ..... என்பன உள்ளன.

04. கிணற்றுக்கு கிழக்கே ..... உள்ளது.

05. பலா மரத்திற்கு தெற்கே ..... என்பன உள்ளன.

06. கொய்யாமரம் கிணற்றுக்கு ..... உள்ளது.

07. கொய்யாமரம் வீட்டிற்கு ..... உள்ளது.

08. படலை ..... தென்மேற்கில் உள்ளது.

09. கிணறு ..... தென்மேற்கில் உள்ளது.

10. வீடு படலைக்கு ..... உள்ளது.

www.lkedu.lk

- **பாடம் - பெருக்கல் 03**
- எட்டாம், ஒன்பதாம் பத்தாம் பெருக்கல் வாய்ப்பாட்டினை மனனம் செய்வோம்.

- கீழுள்ள வெற்றிடங்களை நிரப்புவோம்.

6 × 8 = ...	7 × 9 = ...
..... × 8 = 72	..... × 9 = 81
11 × 8 = ...	6 × 9 = ...
..... × 8 = 64	..... × 9 = 27
10 × 8 = ...	10 × 9 = ...

- பெருக்குவோம்.

01			
		5	6
	×		8
...	...	...	...

02			
		7	8
	×		8
...	...	...	...

03			
	3	4	5
×			8
...	...	...	...

04			
	5	0	0
×			8
...	...	...	...

05			
		7	0
	×		9
...	...	...	...

06			
		9	9
	×		9
...	...	...	...

07			
	1	0	1
×			9
...	...	...	...

08			
	6	4	8
×			9
...	...	...	...

09			
		5	6
	×	1	0
...	...	...	...
...	...	...	...
...	...	...	...

10			
	1	0	0
×		1	0
...	...	...	...
...	...	...	...
...	...	...	...

11			
	4	5	5
×		1	0
...	...	...	...
...	...	...	...
...	...	...	...

www.lkedu.lk

- **பின்வரும் பிரசினங்களைத் தீர்ப்போம்.**

01. ஒரு குழுவில் 08 வீரர்கள் வீதம் 27 குழுக்களில் உள்ள வீரர்களின் எண்ணிக்கை யாது? .....

02. ஒரு குவியலில் 08 மாம்பழங்கள் வீதம் 45 குவியல்களில் உள்ள மாம்பழங்களின் எண்ணிக்கை யாது?
.....

03. ஒரு ரோசாச் செடியில் 08 பூக்கள் காணப்பட்டன. அவ்வாறான 60 செடிகளில் காணப்படும் பூக்களின் மொத்த எண்ணிக்கை யாது?
.....

04. ஒரு பைக்கற்றில் 09 விசுக்கோத்துக்களை அடுக்க முடியும் எனின் 70 பைக்கற்றுகளில் எத்தனை விசுக்கோத்துகளை அடுக்கலாம்?
.....

05. ஒரு போத்தல் பழப்பானத்தை 09 பேருக்கு வழங்க முடியும் எனின் 115 பான போத்தல்களை எத்தனை பேருக்கு வழங்கலாம்?
.....

06. ஒரு சட்டைக்குப் பொருத்துவதற்கு 09 பொத்தான்கள் தேவைப்படுகின்றது. அதனைப்போல 300 சட்டைகளுக்குப் பொருத்துவதற்கு எத்தனை பொத்தான்கள் தேவை? .....

07. ஒரு வகுப்பில் 47 மாணவர்கள் உள்ளனர். ஒவ்வொரு மாணவருக்கும் 09 பயிற்சிப் புத்தகங்கள் வீதம் வழங்க வேண்டியுள்ளது. எனவே அவ்வகுப்பிற்குத் தேவையான மொத்த பயிற்சிப் புத்தகங்களின் எண்ணிக்கை யாது?
.....

08. ஒரு அட்டைப் பெட்டியில் 10 பால்மா பெட்டிகளை அடுக்கலாம். 117 அட்டைப் பெட்டிகளில் அடுக்குவதற்கு தேவையான பால்மா பெட்டிகளின் எண்ணிக்கை யாது?
.....

09. ஒரு நாளில் 10 சட்டைகளைத் தைக்கும் ஒருவர் 03 வாரங்களில் எத்தனை சட்டைகளைத் தைப்பார்?
.....

10. ஒரு நோயாளிக்கு வழங்குவதற்கு 08 முகக்கவசங்கள் தேவை. 175 நோயாளிகளுக்கு வழங்குவதற்கு எத்தனை முகக்கவசங்கள் தேவை?
.....

www.ikeuu.lk

- பாடம் - கனவளவும் கொள்ளளவும் 02

1000ml = 1l

- கூட்டுவோம்.

01					
l			ml		
	5		5	0	0
	5		5	0	0

02					
l			ml		
1	3		5	0	0
	4		0	0	0

03					
l			ml		
3	3		5	0	0
3	7		5	0	0

- பெருக்குவோம்.

	01								02								03							
	l			ml					l			ml					l			ml				
		5		1	0	0			1	5		0	5	0			1	0		1	5	0		
×						2		×						5		×						4		
	04								05								06							
	l			ml					l			ml					l			ml				
	4	0		0	5	0			2	3		1	5	0			1	5		5	0	0		
×						3		×						2		×						2		
	07								08								09							
	l			ml					l			ml					l			ml				
	1	5		7	5	0			1	3		4	5	0			2	2		0	7	5		
×						3		×						3		×						3		

www.ikedu.lk

- **வகுப்போம்**

01. 6 l 500 ml ÷ 2 = ...

02. 9 l 750 ml ÷ 3 = ...

03. 24 l 800 ml ÷ 2 = ...

04. 32 l 400 ml ÷ 4 = ...

05. 35 l 650 ml ÷ 5 = ...

06. 25 l 250 ml ÷ 5 = ...

07. 75 l 050ml ÷ 5 = ...

- **பிரசினங்களைத் தீர்ப்போம்.**

01. ஒரு தாங்கியில் 5l 500ml நீரை நிரப்பலாம். அவ்வாறான 4 தாங்கிகளில் எவ்வளவு நீரை நிரப்பலாம்?

.....

02. ஒரு சிற்றுண்டிச்சாலையில் தேநீர் தயாரிப்பதற்காக ஒரு நாளைக்கு 18l 200ml நீர் தேவைப்படுகிறது. அச்சிற்றுண்டிச் சாலைக்கு 5 நாட்களுக்கு தேவையான நீரின் அளவு யாது?

.....

03. ஒரு அலுமாரிக்குப் பூசுவதற்கு 750ml தீந்தைத் தேவைப்படுகிறது. அவ்வாறான 5 அலுமாரிகளுக்குப் பூசுவதற்குத் தேவையான தீந்தையின் அளவு யாது?

.....

04. ஒரு பெரிய தாங்கியில் 45l நீர் நிரப்பப்பட்டுள்ளது. அதனை 5 சமமான சிறிய தாங்கிகளில் நிரப்ப வேண்டியுள்ளது எனின் ஒரு சிறிய தாங்கி கொள்ளும் நீரின் அளவு எவ்வளவாக இருக்கும்?

.....

05. 48800ml எரிபொருளை 4 பேருந்துகளுக்கு சமமான அளவில் நிரப்ப வேண்டியுள்ளது எனின் ஒரு பேருந்திற்கு எவ்வளவு எரிபொருள் நிரப்ப வேண்டும்?

.....

www.ikedu.lk

- பாடம் - வகுத்தல் 03
- நெடும் வகுத்தல் முறை மூலம் விடையைப் பெறுவோம்.

01. 808 ÷ 8 = ... 02) 880 ÷ 8 = ...

03) 732 ÷ 8 = ... 04) 560 ÷ 8 = ...

05) 400 ÷ 8 = ... 06) 345 ÷ 9 = ...

07) 128 ÷ 9 = ... 08) 650 ÷ 9 = ...

09) 909 ÷ 9 = ... 10) 990 ÷ 9 = ...

- பின்வரும் அட்டவணைகளில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவோம்.

88	÷	8	=	
	÷	8	=	10
72	÷		=	9
	÷	8	=	12
160	÷	8	=	
	÷	8	=	15
99	÷	9	=	
45	÷		=	5

27	÷	9	=	
	÷	9	=	9
189	÷	9	=	
	÷	9	=	20
100	÷	10	=	
130	÷		=	13
	÷	10	=	17
	÷	10	=	11

www.ikedu.lk

- **பின்வரும் பிரசினங்களைத் தீர்ப்போம்.**

01. மூன்றாம் தவணைப் பரீட்சை நடைபெறுவதற்கு இன்னும் 77 நாட்கள் உள்ளன. அந்நாட்களின் எண்ணிக்கை எத்தனை வாரங்களாகும்?

.....

02. 543 பொத்தான்களை ஓர் ஆடைக்கு 5 வீதம் ஆடைகளுக்குப் பொருத்த வேண்டியிருந்தது.

1. பொத்தான்களை ஓர் ஆடைக்கு 5 வீதம் எத்தனை ஆடைகளுக்குப் பொருத்தலாம்?

.....

2. அவ்வாறான இன்னுமோர் ஆடைக்கு 5 பொத்தான்களைப் பொருத்துவதற்கு இன்னும் எத்தனை பொத்தான்கள் தேவை?

.....

03. 872 பென்சில்களை நண்பர்கள் நால்வருக்கிடையில் சமமாகப் பகிர்ந்து கொண்டால் ஒருவருக்குக் கிடைக்கும் பென்சில்களின் எண்ணிக்கை யாது?

.....

04. கம்பி ஒன்றிலிருந்து 9 இரும்பு வளையங்களைத் தயாரிக்க முடியும். 450 இரும்பு வளையங்கள் தயாரிப்பதற்கு அவ்வாறான எத்தனை கம்பிகள் தேவை?

.....

05. 155 அப்பியாசப் புத்தகங்கள் 8 பேர்களிடையே பங்கிடப்பட்டது. பங்கிடப்பட்டபின் எஞ்சிய அப்பியாசப் புத்தகங்கள் எத்தனை?

.....

06. 622 புத்தகங்களைக் கொண்டு ஒரு பொதியில் 9 புத்தகங்கள் வீதம் இருக்குமாறு எத்தனை பொதிகளைச் செய்யலாம்?

.....

07. 800 இனிப்புகளில் 65 ஐ மீதிப்படுத்தி வைத்து மற்றைய எல்லாம் ஒரு பைக்கற்றில் 7 வீதம் இருக்குமாறு சிறிய பைக்கற்றுகளாகப் பொதி செய்யப்பட்டன.

1. சிறிய பைக்கற்றுகளில் பொதி செய்யப்பட்ட இனிப்புகளின் மொத்த எண்ணிக்கை யாது? .....
2. அத்தகைய எத்தனை சிறிய பைக்கற்றுகள் தயார் செய்யலாம்?

.....

www.ikedu.lk